**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 580 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 5** |
| **Name** | : | சுஜி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.07.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நாகர்கோவிலில், தக்கலையில் குடியிருந்து வருகிறேன். நான் M.Sc யில் journalism படித்துள்ளேன். ஆஜர் எதிரியைத் தெரியும். ஆஜர் எதிரி பெயர் ஜோதிமுருகன். 26 ம் தேதி செப்டம்பர் மாதம் 2019 ம் ஆண்டு அன்று நாங்கள் பல்கலைக்கழகத்தின் வகுப்பறையில் இருந்தோம். எங்கள் இதழியல் துறையின் தலைவர் அசா1 ஜெனிபா அவர்கள் அறையில் இருந்து சத்தம் கேட்டது. நான் 2017 ம் ஆண்டு கல்லூரியில் சேர்ந்தேன். நான், மற்றும் எனது நண்பர்கள் சேர்ந்து சத்தம் கேட்ட அசா1 ன் அறைக்கு ஓடிச்சென்று பார்த்தோம். அப்போது அசா1 அவரது அறையின் கதவுக்கு அருகே கீழே விழுந்து கிடந்தார். ஆஜர் எதிரி அசா1 ன் முதுகில் கத்தியால் குத்திக்கொண்டு இருந்தார். அப்போது காலை சுமார் 10.20 மணி முதல் 10.30 மணிக்குள் இருக்கும். அதன் பிறகு ஆஜர் எதிரி கத்தியை போட்டுவிட்டு ஓடிவிட்டார். நாங்கள் நிறைய பேர் வருவதைப்பார்த்தவுடன் ஆஜர் எதிரி கத்தியை போட்டுவிட்டு ஓடிவிட்டார். ஆஜர் எதிரி அசா1 ன் முதுகு, கை, மார்பு, தோள்பட்டை ஆகிய பகுதியில் குத்திக்கொண்டு இருந்தார். அதன் பிறகு நாங்கள் அனைவரும் அசா1 மேடமை தூக்கிக்கொண்டு ஆம்புலன்சில்

ஏற்றினோம். அன்றைய தினம் எங்கள் பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடந்து கொண்டு இருந்ததது. எங்கள் பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாமிற்காக மதுரை மாவட்ட ஆட்சியர் வந்திருந்தார். அதற்காக ஆம்புலன்ஸ் வந்திருந்ததது. அந்த ஆம்புலன்சில் அசா1 எங்கள் மேடத்தை ஏற்றி, நாகமலைபுதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதன் பிறகு அசா1 ஐ வடமலையான் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சேர்த்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

நான் தற்போது எங்கள் வீட்டில் இருந்து கொண்டே editor ஆக வேலை செய்து வருகிறேன். நான் கல்லூரிக்கு போகும் போதே ஆம்புலன்ஸ் ரெடியாக இருந்தது. எங்களது துறையின் வகுப்பறை தனியாக உள்ளது. கீழே தமிழ் துறையும், மேலே மொழியியல் துறை உள்ளது. சம்பவத்திற்கு முன்பும், பின்பும் நான் ஆஜர் எதிரியைப் பார்த்தது இல்லை. வேலை வாய்ப்பு முகாமிற்கு சுமார் எத்தனை பேர் கலந்து கொண்டார்கள் என்றால் அது பற்றி தெரியாது. வேலைவாய்ப்பு முகாம் இருந்ததால், அன்று எங்கள் பல்கலைக்கழகத்திற்கு பத்திரிக்கையாளர்கள் வந்திருந்தார்கள். கலெக்டர் வந்திருந்தார். சம்பவ தினத்தன்று எங்கள் துறையின் வகுப்பிற்கு சுமார் 15 மாணவர்கள் வந்திருந்தார்கள். சம்பவத்தன்று first hours வகுப்பிற்கு யாரும் வரவில்லை. எங்கள் பல்கலைகழகத்தில் எனக்கு அடையாள அட்டை வழங்கியுள்ளார்கள். எனது அடையாள அட்டையை நான் போலிசார் விசாரணையின் போது காட்டினேன். கொடுக்கவில்லை. எங்கள் துறைதலைவர் அசா1 எனக்கு நன்கு பழக்கம். போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக ஒரு முறை விசாரணை செய்தார்கள். சம்வ தினத்தின் மாலை விசாரணை செய்தார்கள். நாங்கள் ஓடி சென்று பார்த்த போது அசா1 எங்கள் துறைத்தலைவர் குப்புறவிழுந்து கிடந்தார். ஆஜர் எதிரி பயன்படுத்திய கத்தி சமயலுக்கு பயன்படுத்தக்கூடிய காய்கறி வெட்டும் கத்தி

போல் இருந்தது. போலிசார் அந்த கத்தியை எடுத்த போது நான் அங்கு இல்லை. போலிசார் அந்த கத்தியைக் காட்டி என்னிடம் விசாரணை செய்யவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் ஆஜர் எதிரி அசா1 ஐ தாக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அசா1 ஐ குத்தியதை நான் பார்த்தேன். எங்கள் துறையில் 2 சார் மற்றும் அசா1 மேடம் உள்ளார்கள். 2 அலுவலக பணியாளர்கள் உள்ளார்கள். அவர்கள் யாரும் வரவில்லை என்றால் அவர்கள் கீழே சென்றிருந்தார்கள். கீழே Tantea டீ கடை உள்ளது. எங்கள் துறையின் மற்ற பணியாளர்கள் சம்பவ சமயத்தில் எங்கு சென்றிருப்பார்கள் என்று தெரியவில்லை. எங்கள் துறைக்கு கீழேயே தான் டேன்டீ கடை உள்ளது. சம்பவத்திற்கு பிறகு எங்கள் துறைதலைவர் அசா1 ஐ நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். அப்போது அசா1 என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார் என்றால் நானாகத்தான் sign செய்தேன். நான் இதழியல்துறையில் படிப்பதாலும், மேற்படிப்பிற்காக எங்கள் துறையின் தலைவர் அசா1 ன் பரிந்துரை தேவை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரணை செய்த போது, அசா1 ஐ ஆம்புலன்சில், முதலில் நாகமலைபுதுக்கோட்டை அரசு மருத்தவமனைக்கும், பின்னர் வடமலையான் மருத்துவமனைக்கும் கொண்டு சென்ற விபரத்தை சொன்னேன். நான் ஆம்புலன்சில் போகவில்லை. பின்னால் பஸ்சில் சென்றோம். ஆம்புலன்சில் எத்தனை மருத்துவர்கள் இருந்தார்கள் என்று தெரியவில்லை. ஆம்புலன்சில் இருந்த மருத்துவர்கள் தான் எங்கள் மேடம் அசா1 ஐ தூக்கி சென்றார்கள். எனது ஆடையில் இரத்தம் எதுவும் படியவில்லை. சம்பவ தினத்தில் கலெக்ட்டர் வந்திருந்ததால் எங்கள் பல்கலைகழகத்தில் போலிஸ் பாதுகாப்பு இருந்தது. நான் அந்த போலிசாரிடம் சென்று நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுக்கவில்லை. சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரி யார் என்றும், அவர் பெயர், ஊர் போன்ற விபரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. சாயங்காலம் என்னை போலிசார் விசாரணை செய்த போது போலிசார் சொல்லித்தான் ஆஜர் எதிரி பற்றி தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. எனது கல்லூரி மூத்த மாணவர்கள் சொல்லி தெரிந்து

கொண்டேன். எங்கள் துறையில், துறைத்தலைவர் அசா1 ன் பரிந்துரையின் பேரில் தான், எங்கள் பல்கலைகழகத்தில் மேற்படிப்பு படிக்கவோ, வேலைக்கோ செல்ல இயலும் என்றால் சரியல்ல. பொதுவாக எங்கள் பல்கலைகழகத்தில் காலையில் மாணவர் வருகை பதிவேடு எடுப்பது வழக்கம். நான் முதல் விசாரணையில் சொன்னது போல், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. அசா1 கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இன்று நீதிமன்றத்திற்கு என்னை அசா1 ன் கணவர் தான் அழைத்து வந்தார். இன்று நீதிமன்றத்தில் எவ்வாறு சாட்சி சொல்லவேண்டும் என்று அசா1-ன் கணவர் மூலம் தெரிந்து கொண்டுதான் வந்தேன் என்றால் சரியல்ல. எங்கள் துறை தலைவர் அசா1, எங்கள் துறையில் மாணவர்களிடம் வேலை வாங்கித்தருவதாக பணம் வாங்கிக்கொண்டு வேலை வாங்கி தராததால் அவரால் பாதிக்கப்பட்ட யாரோ தான் இவ்வாறு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் இதழியல் துறையில் படித்ததற்கான ஆவணங்கள் எதுவும் கொடுக்காததால் நான் அந்த கல்லூரியில் படிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 க்கு நான் மிகவும் வேண்டப்பட்டவர் என்பதால் நடக்காத விஷயத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை